காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

சிவகங்கை மாநாட்டு
தலைவரும், திறப்பாளரும்.

31-7-66

விலை 20 காசு

கேள்வி--பதில்!

1. வியட்நாம் பிரச்சினையில் சமாதானம் ஏற்படவேண்டுமென்று இந்திராகாந்தி அவர்கள் எடுத்துககொண்ட முயற்சி பாராட்டப்பட்டதா?

ஓ! பாராட்டுக் கடிதமே அனுப்பினுரே ஹோ-சி-மின், சமரச முயற்சிக்கு நன்றி தெரிவித்து! ஆனுல் இந்திரா காந்தி அம்மையாருக்கு அல்ல! பிரன்ச்சுக் குடிஅரசுத் தலைவர் டி'காலுக்கு. பிரான்சு மேற்கொண்ட முயற்சியைத்தான் பாராட்டினுர். இந்திரா அம்மையாரின் முயற்சிக்கு அல்ல.

2. இனி அமெரிக்காவிடம் வாங்கும உணவுப் பொருளுக்கு 'டாலா'தான் கொடுக்கவேண்டுமாமே, காங்கிரஸ் அரசு கவலைப் படவில்லையா?

கவலை எதற்காக? கடனுக்கு உணவுப் பொருள் கிடைத்தால் போதும்; டாலராக இருந்தால் என்ன ரூபாயாக இருந்தால் என்ன என்று காங்கிரஸ் அரசினர் கருதுகின்றனர். கடனைத் திருப்பிக் கொடுக்கிறபோது பாாத்துக் கொள்வோமே, இப்போது அதைப் பற்றிக் கவலைப் படுவானேன் என்ற தைரியம் அவர்களுக்கு.

3. காமராஜர் உண்மையான சோஷியலிஸ்டு என்று கருதித்தானே சோவியத் ரஷியா வரவேற்கிறது?

காமராஜரை, உண்மையான சோஷியலிஸ்டு என்று எப்படி சோவியத் அரசு ஒப்புக்கொள்ள முடியும். அவர் உண்மையான சோஷியலிஸ்டு அல்ல என்று வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியே தெரிவித்து விட்டிருக்கிறதே! ஒரே அடியாக அமெரிக்கா பக்கம் காஙகிரஸ் சாய்ந்துவிடக்கூடாதே என்பதற்காகவே, சோவியத் அரசு காஙகிரஸ் தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்கிறது.

4 பாலைவனம் சோலைவனம் ஆகும் — ஆக்கிக்காட்டுகிறேம் பாரீர் என்று பாடினுர்களே காங்கிரஸ்காரர்கள், அவ்வளவு சுலபமான காரியமென்று கருதியா பாடினுர்கள?

பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டியதுதானே! இதிலென்ன கஷ்டம்? பா என்ற எழுத்தை எடுத்துவிட்டு, **சோ** என்ற எழுத்தைப் போட்டுவிட வேண்டியதுதானே! என்று எண்ணிக்கொண்டார்கள் போல இருக்கிறது.

5. ரூபாய் மதிப்பு குறைக்கப் பட்டதால் ஏற்றுமதி அதிகமாகும் என்கிருர்களே, உண்மையா?

ஆமாம்! ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதும், நிதிமந்திரி சவுத்ரி, உணவு மந்திரி சுப்ரமணியம், திட்ட மந்திரி அசோக் மேதா, ரயில் மந்திரி படீல், வியாபார மந்திரி மனுபாய்ஷா, பிரதம மந்திரி எல்லோரும் வெளிநாடுகளுக்குச் சென்ருர்களே! கவனிக்கவில்லையா!!

6. வெளிநாடுகளில் உதவி பெறுவதை பிச்சை எடுக்கிறேம் என்று சொல்வதற்குப் பெரிய காங்கிரஸ் தலைவர்கள் கோபம் தெரிவிக்கிருர்களே, ஏன்?

பிச்சைக்காரர்களைநம்பி, யாராவது கடன் கொடுப்பார்களா! வெளிநாட்டுக்காரர் காதில், இந்தியத் தலைவர்கள் பிச்சை எடுக்கிருர்கள் என்று இங்கே பேசுவது விழுந்தால், கடன் கொடுப்பார்களா? அந்தப் பயம் கோபத்தைக் கிளறுகிறது.

7. சர். எ. ராமசாமி முதலியார்கூட ஒருமுறை காங்கிரசில் சேர்ந்தாராமே, உண்மையா?

ஆமாம்! சேர்ந்தார்! ஆனுல் அங்கே தன்னை மதிக்க மறுத்ததை உணர்ந்து வெளியேறினுர்.

8. தமிழ்ப் பண்பாட்டை மறவாமல் வேட்டி சட்டையுடன் ரஷியா சென்றிருக்கிருரே, காமராஜர் இதைக்கூடப் பாராட்ட மாட்டீர்களா என்று ஒரு காங்கிரஸ் நண்பர் கேட்கிருர், என்ன சொல்லுவது?

பாராட்டலாம். வேட்டி சட்டையுடன் வெளிநாடு சென்று தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுகிருர் என்கிறீர்களே, அதே காமராஜர் தமது பிறந்த தினத்தைக் கொண்டாட, 'கேக்' வெட்டினுராமே—படம்கூட வந்ததே—அது தமிழ்ப் பண்பாடு தானு என்பதற்கு மட்டும் பதில் கூறச்சொல்லுமே, பார்ப்போம்.

9. காமராஜரை வழி அனுப்பி வைக்க இந்திரா காந்தி அம்மையார் விமான நிலையம் செல்லாதது, வேண்டுமென்றே அவமானம் செய்வதல்லவா?

பெரிய இடத்து விவகாரம் நமக்கேன். இந்திரா காந்தி விமான நிலையம் சென்று காமராஜரை வழி அனுப்பி மரியாதை காட்டாதது அவருக்கு அவமானத்தைத் தேடித் தருவது என்ருல், பிரதம மந்திரியான பிறகு முதன் முறையாக இந்திராகாந்தி அவர்கள் சென்னை வந்தபோது, வரவேற்க காமராஜர் இல்லாதது சரியா, அது வேண்டுமென்றே இந்திரா காந்தி அம்மையாரை அவமானப்படுத்துவது ஆகாதா என்றும் கேள்வி கிளம்புமே! பெரியஇடத்து விவகாரம் நமககு ஏன்?

10. எவ்வளவோ பிளவு ஏற்பட்ட பிறகும் பொதுமக்களிடம் அதிருப்தி வளர்ந்த நிலையிலும், தேர்தலில் வெற்றி எமக்குத்தான் என்று காங்கிரஸ தலைவாகள் பேசி வருகிருர்களே, எந்தத் தைரியத்தில்?

பணம் பாதாளம் வரையில் பாயும் என்ற எண்ணம்!

11. கிருஷ்ணமேனன் என்ன செய்து கொணடிருககிருர்?

"அந்த நாளை" எண்ணி ஏக்கப்பட்டுக்கொண்டிருக்கக்கூடும்.

விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூலை மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவருமல்அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறேம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

உரிமையாளர்
'காஞ்சி'

> இந்தியா தனது மானத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு ஆயுதம் ஏந்துவதை நான் விரும்புவேன்; இந்தியாவின் மானம் பறிபோவதை, கையாலாகாத கோழையைப் போலப் பார்த்துக்கொண்டிருப்பதை நான் விரும்பமாட்டேன்,
>
> — காந்தியடிகள்.

காஞ்சி

மலர் 3 31—7—66 இதழ் 1

இருவர் மட்டும் பேசவில்லையாம்!

ரூபாயின் மதிப்பைக் குறைத்த காங்கிரஸ் அரசை நடத்திச் செல்பவர், இந்திராகாந்தி அம்மையார்! காங்கிரஸ் கட்சியை அதன் தலைவர் என்ற முறையில் நடத்திச் செல்பவர் காமராஜர்!

இந்த இருவரும், ரூபாய் மதிப்புக் குறைப்புப் பற்றிய பிரச்சினை பலமணி நேரம் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டபோது பேசவில்லையாம்!

தன் அரசு மேற்கொண்ட ஒரு தீவிரமான நடவடிக்கைபற்றி, தன் கட்சியின் 'மேலிடம்' விவாதம் நடத்தும்போது, அதிலே கலந்துகொண்டு, அரசு எடுத்த நடவடிக்கையின் நியாயத்தை எடுத்துக்கூறி இருக்கவேண்டிய பொறுப்பு இந்திராகாந்தி அம்மையாருடையது. ஆனால் அவர்கள் வாய் திறக்கவில்லை.

தான் நடத்திச் செல்லும் கட்சி, அந்தக் கட்சி எடுத்த மிக முக்கியமான ஒரு நடவடிக்கை குறித்து என்ன கருதுகிறது என்பதையும், கட்சியின் தலைவர் என்ற முறையில் தமது கருத்து என்ன என்பதையும் தெரிவிக்கவேண்டிய பொறுப்பில்உள்ளவர் காமராஜர். அவரும் வாய் திறக்கவில்லை.

ஆனால் அந்த இருவரையும் உட்காரவைத்துக் கொண்டு, மற்றவர்கள் 'காரசாரமாக' விவாதம் நடத்தி இருக்கிறார்கள்.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது தேவையற்றது தீமைபயப்பது, என்று மட்டுமல்ல, அது அமெரிக்க நிர்ப்பந்தத்தின் காரணமாகவே எடுக்கப்பட்டிருக்கிறது என்று முன்னாள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசி இருக்கிறார்.

அமெரிக்க அரசு நிர்ப்பந்தப்படுத்தியதால்தான் ரூபாயின் மதிப்புக்குறைக்கப்பட்டது என்றுமற்றவர்கள் கூறியபோது, அம்மையார் ஆத்திரப்பட்டார்கள், கடுமையான சொற்களை வீசினார்கள்; வீணர்கள் விவரமறியாதவர்கள் பேச்சு இது என்றார்கள், நாட்டு மானம் காத்திட நான் அறிவேன்; நான் யார் என்று தெரியாமல் பேசுகிறீர்கள்! தெரிந்துகொள்ளுங்கள் நான் நேருவின் திருக்குமாரி!! என்ற கருத்துப்படப் பேசினார்கள்.

அந்த இந்திரா அம்மையாரை எதிரிலே உட்கார வைத்துக்கொண்டே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசுகிறார், அமெரிக்க கெடுபிடிதான் காரணம் இதற்கு! அமெரிக்க நிர்ப்பந்தத்தை நான் இரண்டாண்டுகள் சமாளித்துக்கொண்டிருந்தேன். இப்போது அரசு பணிந்துவிட்டது. இது, நாம் அமெரிக்காவின் அடிமைகளாகிவிட்டோம் என்பதைத்தான் காட்டுகிறது என்று பேசியிருக்கிறார்; கடுமையாகவே.

எதிரில் இருந்த இந்திராகாந்தி அவர்கள் வாய் திறக்கவில்லை.

அப்படிப் பேசாதீர்கள் என்று காமராஜரும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்குச் சொல்லவில்லை.

அவர் கூறுவதற்கு என்ன பதில் கூறப்போகிறீர்கள்? சொல்லுங்களேன் என்று காமராஜர், இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்டுக்கொள்ளவுமில்லை.

அவரும் வாய் மூடிக்கொண்டிருந்திருக்கிறார்.

என்ன சொன்னால் இந்திராகாந்திக்கு எரிச்சலும் ஆத்திரமும் மூண்டிடுமோ, அந்தப் பேச்சாகப் பேசினார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

காமராஜர் — இந்திராகாந்தி, இருவரும் ஏதும் பேசவில்லை.

ஒரு சுதந்திர அரசு வேறோர் அரசின் நிர்ப்பந்தத்திற்காகப் பணிந்து கொடுக்கிறது என்பது தனி நபர்களுக்கு மட்டுமல்ல, அந்த அரசுக்கே அவமானமாகும்; நாட்டுக்கே இழிவு.

அமெரிக்கக் கெடுபிடி காரணமாகத்தான் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டது என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசினார்.

அவர் ஒரு 'ஏனோ தானோ' அல்ல! முன்னாள் நிதி அமைச்சர்.

அவர் பேசிய இடமும் வெட்டவெளி அல்ல; காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில்.

யாரும் இல்லாத இடத்திலே அவர் பேசவில்லை; பிரதம மந்திரியும், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரும் இருந்த இடத்தில் பேசினார்.

உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள் இந்தப் பேச்சைக் கேட்டு?

இந்தப் பேச்சை மறுத்திடாமல் இருவரும் வாய் மூடிக்கொண்டிருந்தது பற்றி என்ன எண்ணிக் கொள்வார்கள்? என் கருத்தின்படி, ரூபாய் மதிப்பைக் குறைத்தது சரி, தேவை, நியாயம். அதனை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லை என்பதை என் கட்சியின் தலைவர் தெரிவிக்கட்டும், நான் கேட்டுக் கொள்கிறேன் இங்கிருந்து அனுப்பப்பட்டவர் இவ்வளவு எரிச்சலுடன் பேசுவதா, அதை நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா, இதனைக் காங்கிரஸ் தலைவர் அனுமதித்துக்கொண்டிருப்பதா என்று அம்மையார் கூறவில்லை,

கூறியிருந்திருந்தால், விளைவுகள் எப்படியோ நாமறியோம். ஒரு வேளை, விரும்பத்தகாத விளைகளைத் தவிர்க்கவே பிரதம மந்திரி வாளாயிருந்தார்களோ என்னமோ.

ஆனால், அமைச்சரவை கூடி ஒரு முடிவு எடுத்து, அது பற்றிக் குறை கூறுபவர்களைக் கண்டித்து அந்த முடிவு நியாயமானது என்று மெய்ப்பிக்க அறிக்கைகளை அடுக்கடுக்காக வெளியிட்டு, பிறகு கட்சியின் மேலிடம் கூடியபோது அதிலே முன்னாள் நிதி அமைச்சர்களில் இருவர், இந்நாள் அமைச்சர் ஒருவர் முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஒருவர் எனும் இத்தனைப்பேர் வன்மையாகக் கண்டித்தபோது அமைச்சர் அவையை நடத்திச் செல்லும் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், தமது திட்டத்தைக் காத்திடவும், தன்மானத்தைக் காத்திடவும், முனைந்திருக்கவேண்டும். காணோம், பேசவே இல்லை.

அஃதேபோன்று நாட்டுமக்களின் உள்ளத்தை உலுக்கக்கத்தக்கதும், பொருளாதாரத் துறையில் பல்வேறு நிலைமைகளை மூட்டிவிடத்தக்கதுமான ஒரு முக்கியமான பிரச்சினையான நாணயமதிப்புக் குறைப்பு பற்றி விவாதம் நடைபெற்றபோது, கட்சியின் தலைவர் ஒருகருத்தும் கூறாமல், 'கோழிச்சண்டை' நடப்பதைப் பார்த்துக்கொண்டு, சுருட்டு குடிக்கும் கிராமத்துப் பெரியவர்போல, யாரோ ஏதோ பேசிக்கொள்ளட்டும், எதற்கோ எப்படியோ சண்டை போடட்டும், எது வலுவுடன் இருக்கிறதோ அது வெற்றிபெற்றுவிட்டுப் போகட்டும் என்ற விதமாகவா இருப்பது?

வேறு எந்த நாட்டிலாவது நடக்குமா இந்த வேடிக்கை!

இங்கு நடக்கிறது! இங்குதான் நடக்கும்!!

அம்மையாரே வாய் திறவாதிருந்தபோது, ரூபாய் மதிப்புக் குறைப்பு மிகவும் தேவையானது, ஏராளமான நன்மை பயப்பது, அதன் அருமை பெருமை அறியாமல் சிலர் கண்டிக்கிறார்களே, என்ன அறியாமை! என்ன அறியாமை! என்று இங்கே வீராவேசமாகப் பேசிய பக்தவச்சலனார் ஏன் வாய்திறக்கவில்லை, ரூபாயின் மதிப்புக் குறைத்ததை ஆதரித்து ஏன் பேசவில்லை என்று கேட்பது வீண்வேலை.

பேசவேண்டிய இருவரும் பேசவில்லை—பேசவேண்டிய நேரத்தில், பேசவேண்டிய இடத்தில்!

ஆனால், பாராளுமன்றத்திலே, பலரும் நாணய மதிப்பைக் குறைத்ததுபற்றிக் கண்டிக்கும்போது அம்மையார் வீராப்பொழிவார்! வீணர்கள், விவரமறியாதவர்கள், விஷமிகள் என்ற ஏசலெல்லாம் சரமாரியாகக் கிளம்பும். டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை என்னென்ன கூறிக் கண்டித்திருக்கவேண்டுமோ அந்த வார்த்தைகள் அவ்வளவையும், எதிர்க்கட்சிகளின்மீது எடுத்து வீசுவதிலே வீரம்! என்ன வீரமோ! என்ன அரசியலோ, புரியவே இல்லை!!

அம்மையார் சென்ற திங்கள்தான் சென்றிருந்தார்கள் சோவியத் ரஷியாவுக்கு; அங்கு ரூபாயின் மதிப்புக் குறைத்தது ஏன் என்ற விளக்கம் அளித்தார்; அமெரிக்க நிர்ப்பந்தம் காரணமாக இது நடைபெற்றது என்ற புகாரைப் பலமாகக் கண்டித்தார்கள்; இந்தியப் பொருளாதார நிலையைச் சீர்திருத்த, ரூபாயின் மதிப்பைக் குறைக்க நேரிட்டது; இது நன்மை பயக்கும் என்று கூறினார்கள்; சோவியத் ஆட்சியின் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்; ஒரு புன்னகையுடன்!

இப்போது, ரூபாயின் மதிப்பைக் குறைத்தது அரசியல் முனையிலே இருந்து பார்த்தால் மதியீனம், பொருளாதார முனையிலிருந்து பார்த்தால் தீமை பயப்பது என்று கூறி, ரூபாய் மதிப்புக் குறைப்பைக் கண்டித்துப் பேசிய, தொழில் அமைச்சர் வெங்கட்ராமனுடன், ரூபாய் மதிப்புக் குறைப்புத் தேவையில்லை என்ற கருத்தைக் கொண்டதாகக் கூறப்படும் காமராஜர், சோவியத்தில் உலா வருகிறார்.

இவர்கள் என்ன கூறுவார்கள், சோவியத் அரசுக்கு? டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பச்சையாகக் கூறிவிட்டாரே, அமெரிக்க நிர்ப்பந்தத்துக்கு இந்தியா பணிந்துவிட்டது என்று; அதனை மறுப்பார்களா? அல்லது, "ஆமாம்! அப்படித்தான் நடந்துவிட்டது. என்ன செய்வது?" என்று கைபிசைந்து கொள்வார்களா? தெரியவில்லை.

சோவியத் அரசுதான் என்ன நினைக்கும் இந்தியப் பேரரசு உள்ள இலட்சணம் பற்றி?

ஒரு திங்கள் பிரதம மந்திரி வருகிறார், ரூபாய் மதிப்புக் குறைப்பு இந்தியாவின் நன்மைக்காக இந்திய அரசே திட்டமிட்டு மேற்கொண்ட முடிவு என்பது பற்றி எடுத்துக் கூறிட.

அடுத்த திங்கள், பிரதம மந்திரிகளைப் பீடம் ஏற்றிவைக்கும் பெரியவராமே காமராஜர், அவர் வருகிறார், ரூபாய் மதிப்புக் குறைப்புக் கண்டிக்கத்தக்கது என்ற கருத்தைச் சுமந்துகொண்டு.

இந்த வேடிக்கையை வேறு எங்குமே பார்க்க முடியாதே, இந்தியா காட்டுகிறதே என்று எண்ணி, சோவியத் அரசு, பரிதாபம் தெரிவிக்குமா, பரிகாசம் செய்யுமா என்பது புரியவில்லை.

நாணய மதிப்புக் குறைப்பு போன்ற மிகப் பெரிய பிரச்சினையில், பிரதம மந்திரியின் கருத்தும் காங்கிரஸ் தலைவரின் கருத்தும், முரண்படுகிறது. இந்நாள் நிதி அமைச்சர் கருத்துக்கும் 'முந்நாள்களின்' கருத்துக்கும் மோதுதல் தெரிகிறது.

இப்படி ஒரு அரசா!—என்று சோவியத் அரசு எண்ணாமலிருக்க முடியுமா!!

ரூபாய் மதிப்புக் குறைப்பு போன்ற அடிப்படையான பிரச்சினையில், கட்சித் தலைவருக்கும் ஆட்சித் தலைவருக்கும் ஒருமித்த கருத்து இருந்திட வேண்டும்; கருத்து வேற்றுமை ஏற்படினும், கலந்து பேசி, வேற்றுமையை நீக்கிக் கொள்ளவேண்டும்.

அதுதான் முறை; ஜனநாயக நெறி. ஆட்சித் தலைவர் குற்றம் செய்துவிட்டவர் என்ற நிலையை கட்சித் தலைவர் உருவாக்கி வைக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கட்சித் தலைவர் என்ன வேண்டுமானாலும் கருதிக் கொள்ளட்டும், நான் எடுத்த முடிவு, பிரதம மந்திரி என்ற நிலையில்!—என்று இந்திரா காந்தி அம்மையார் தீர்மானமாகக் கருதுவதாகத் தெரிகிறது. அதனால் தான், காரியக் கமிட்டிக் கூட்டத்தில், அந்த இருவரும்

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

ஒரு கவிதை வேண்டுமா—பயப்படாதே நான் எழுதினது அல்ல—நமக்காக என்று எழுதித் தரப்பட்டதுமல்ல—ஒரு கவிஞரின் கற்பனைக் கனி!

கவிஞர்கள் விருப்பம் இருக்கும்போது புகழ்வார்கள், வேறு இடம் சென்றுவிட்டால் முன்னுள்ளதனை முற்றிலும் மறந்துபோய் எவரெவருக்குத் துதிபாடிக்கொண்டிருந்தனரோ அவர்களையே தூற்றிப் பாடுவரே என்று எண்ணியா தம்பி! கவிஞரின் கற்பனையா என்று கவலையுடன் கேட்கிறாய். அச்சம் வேண்டாம். இந்தக் கவிதை என்னைப் பற்றியதுமல்ல, நமது கழகத்தைப் பற்றியதுமல்ல; நாட்டு நிலையைக் குறித்த கவிதை.

நாட்டு நிலைமை காங்கிரஸ் ஆட்சி காரணமாக நல்லபடி இல்லையே, நலிவு மிகுந்திருக்கிறதே என்று குறைகூறி வருபவர் நாம். ஆகவே நாட்டு நிலைமைபற்றி நமது ஏட்டினுக்காக எழுதி அனுப்பப்பட்ட கவிதை என்றால், காங்கிரஸ் ஆட்சியினைக் குறித்துக் கண்டிப்பதாகத்தான் இருக்கும்; அவை அறிதலும் கவிகளுக்கு உண்டே என்கிறாயா? தம்பி! இக் கவிதை, நாட்டு நிலைமைகள் நலிவுற்றிருப்பதைத்தான் காட்டுகிறது, ஆனால் நமக்காக இயற்றி அனுப்பப்பட்டது அல்ல; காங்கிரசை ஆதரிக்கும் ஏட்டுக்காக அனுப்பப்பட்டு, வெளியிடப்பட்ட கவிதை; 'குமுதம்' இதழில், சுரபி எனும் கவிஞர் வெளியிட்டது.

ஒட்டாண்டியாக்கிவிட்டு....!

ஆசிரியர் கேட்டுக்கொண்டார்போல இருக்கிறது, சுதந்திரத்தினால் கிடைத்த சுவை பற்றி கவிதை தரும்படி.

கேட்டதையே கேட்டார், பாவம் புதிதாகக் காதல் கொண்டு கசிந்து கண்ணீர் மல்கிக்கொண்டிருக்கும் கவிவாணர்களை மட்டும் கேட்டிருக்கக்கூடாதா!! காவடிச்சிந்தும், திருப்புகழுமாகப் பொழிந்து தந்திருப்பார்களே! ஆசிரியர் அப்படிப்பட்ட 'சிந்து' ஒன்றையும் வெளியிட்டார், இதோ நான் இப்போது உன் பார்வைக்குக் கொண்டுவரும் பாடலையும் வெளியிட்டார்! எவரெவருக்கு எதெது தேவையோ அதை எடுத்துக்கொள்ளட்டும் என்ற பெருநோக்கம் காரணமாக என்று எண்ணுகிறேன். அல்லது அவருக்கே ஒருவேளை இப்படியும் மற்றோர் வேளை அப்படியுமாக எண்ணம் எழும்புமோ என்னமோ, தெரியாது.

கவிதை தந்திடச் சொல்லி ஆசிரியர் கேட்டதும், 'சுரபி' கலலைப்படுகிறார், 'என்னத்தைப் பாட' என்று. தலைப்பே அதுதான். இனி கவிதையைப் படித்திடத் தொடங்கு, தம்பி!

மன்னிக்க வேணுமையா
ஆசிரியரையா!
என்னத்தைப்
பாட ஐயா?
சொன்னத்தையே
புரட்டிச்
சுண்டக் கறி

கலயம் நிறையவில்லை கண்ணீர் உலரவில்லை

சமைத்துச்
சுதந்திர விருந்து
வைக்க — இந்தச்
சுரபியாலாகாதையா!

துவக்கத்திலேயே, 'சூடு' கலந்துவிடுகிறது. கவிதை கேட்கிறீர்கள், கவிதை! எதைப்பற்றிய கவிதையை எதிர்பார்க்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்; பாரத நாட்டின் கொடி பட்டொளி வீசிப் பறந்திடுவதுபற்றி, 'நானும் மனிதன், நாடாள்வேன்' எனக் கூறச்செய்த ஆட்சியின் பெருமை; அடிமைத்தளைகள் பொடிப்பொடியாகிவிட்ட பெருமை, இவைபற்றித்தானே! இதற்கு நான்தானா அகப்பட்டேன்; என்னிடம் இதனை எதிர்பார்க்காதிர்—இது அறைத்த மாவை அறைப்பது—புளித்துப்போய்விட்டது— வேண்டாம்,

சொன்னத்தையே
புரட்டிச் சுண்டக்கறி
சமைத்துச்
சுதந்திர விருந்துவைக்க
இந்தச் சுரபியாலாகாதையா!

என்று தெரிவிக்கிறார். தெரிவித்துவிட்டு பெருமிதம் எடுத்துரைத்திட என்னய்யா இருக்கிறது என்று கேட்கவே செய்கிறார்.

நாற்பதுகோடி பொங்கி
ஐம்பதாய் ஆவதையா?
நாழிக்குக் கையேந்தி
நகரும் குழுவினையா?
ஏற்பதில் போட்டியிட்டு
எய்டுகளை வாங்கிவந்து
யானைப்பசிக்குப் பொரி
எண்ணிக் கொடுப்பதையா?
என்னத்தைப் பாட ஐயா!

சுதந்திர ஆட்சி நடைபெறுகிறது, ஆனால் மக்கள் சோற்றுக்கு அலையும் நலிவு தலைவிரித்தாடுகிறது. இந்தக் கண்ணுருவிக் காட்சியைக் காணக்காண உள்ளம் வேதனைப்படுகிறது; நீங்களோ சுதந்திரத்தின் அருமை பற்றிப் பாடச் சொல்லுகிறீர்கள்—என்னத்தை ஐயா! பாடுவது! என்று கேட்கிறார். சுதந்திரம் வந்தால், பசிப்பிணி நீங்கிவிடும், மக்கள் நல்வாழ்வு வாழ்வார்கள் என்று சொல்லி வந்தோம்; சொல்லிக்கொண்டே இருக்கிறோம்; இந்த (அவ) இலட்சணத்தைப்பற்றி என்னத்தைப் பாடுவது என்கிறார்.

திட்டங்கள் தீட்டிவைத்துத்
தில்லானா பாடிவந்தோம்
தேனும் பாலும் பெருகித்
தெருவெல்லாம் ஓடுமென்றோம்
சட்டியில் போட்டாச்சு
சற்றே பொறுங்கள் என்றோம்.
சத்தம் பலத்ததல்லால்
சாதம் கொதிக்கக்காணோம்
என்னத்தைப் பாட ஐயா!

எட்டிலே பாத்திகட்டி
எழுத்தை வாரி விதைத்து
எழில்பொங்க வார்த்தைநட்டு
பிரசங்க மாரிபெய்து
கூட்டுக்குழு விளைத்துக்
கொத்தறிக்கை அறுத்துக்
கொட்டி அளந்து வந்தால்
கும்பி நிறைந்திடுமோ?
இரண்டல்ல ஒன்றல்ல
இருபதை ஓட்டிவிட்டோம்
இருந்ததைச் சுரண்டுவதில்
எல்லோரும் போட்டியிட்டோம்
அருண்டவர் படைகளை
அண்டையில் கொண்டுவிட்டோம்
ஆசிய ஜோதியையும்
அணைத்து விழுங்கிவிட்டோம்
என்னத்தைப் பாட ஐயா!

பாயும் படுக்கையுமாய்த்
தாயைக் கிடக்கவிட்டு
பகலுமிரவும் பேயாய்ப்
பதவிக்கலைந்து வந்தோம்
நாயும் நரியும் பொல்லா நச்சரவும்மேயும்
நைந்த குடிசைக்குள்ளே
நாடகமாடி வந்தோம்.

இரும்புக்கு வீண்சண்டை
வரம்புக்குப் போராட்டம்
இளகிடுங் கோவாவை
விழுங்கிட வெறியாட்டம்
துரும்புக்குத் துஜங் கட்டி
உறவுக்குக் குழிவெட்டத்
துடித்திடும் வீணர்க்குச்
சுதந்திரம் ஏதுக்கு?

கருப்பு வெளுக்கவில்லை
கலயம் நிறையவில்லை
களவு கண்ட கிழவன்
கண்ணீர் உலரவில்லை
குறுக்கு நிமிரவில்லை
கும்பிருள் நீங்கவில்லை
கொண்டாட்டப் பாட்டு
நெஞ்சக் குழியில்
சுரக்குமோய்யா!
என்னத்தைப் பாட ஐயா!

தம்பி! கடைசியிலே, இசை மொழியிலே கூறுவார்களே, 'முத்தாய்ப்பு' என்று, அது எவ்வளவு அருமையாக அமைந்திருக்கிறது பார்த்தனையா!

உதட்டு அசைவு அல்ல ஐயா! கவிதை! உள்ளத்திலிருந்து கிளம்பும் உணர்ச்சி, உண்மை; கவிதை! நாட்டு நிலையைக் காணும்போது இதயத்தில் வேதனை மூண்டிடுகிறது, அங்கிருந்து கவிதையாக சுரக்கும்! —என்று கேட்பதன் மூலம் 'சுரபி' அவர்கள் இன்று சுதந்திரத்தால் கிடைத்த சுவையும் பயனும் பற்றிய கவிதைகள் பலவும் நெஞ்சக் குழியிலிருந்து சுரந்தவை அல்ல, எதுகையும் மோனையும் விளையாடிடச் செய்யும் வித்தை! வெறும் உதட்டு அசைவு!!—என்று காட்டுகிறார்.

நாடு ஆள்வது காங்கிரஸ் கட்சி—நாட்டு நிலைமை நெஞ்சக் குழியிலே எழுச்சியைச் சுரந்திடச் செய்வ

சுதந்திரச் சிந்தினுல் சுபிட்சம் கிடைக்கலே!

தாக இல்லை என்று 'சுரபி' கூறுகிருர்—இது மறைமுக மாகக் காங்கிரஸ் கட்சியைக் கண்டிப்பதாக இருக்கிறது என்பது அல்ல, நான் இந்தக் கவிதையைச் சுவைத்த தற்கான காரணம்.

இது நமது நாட்டு அறிவாளர்களின் உள்ளத்திலே முகிழ்த்துள்ள புதிய கருத் தோட்டத்தைக் காட்டுகிறது என்பதால்.

எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந் தால் எத்தனை சலிப்பு ஏற்பட்டுவிடும் என் பதை விளக்குகிறது என்பதால்.

சுபிட்சம் வரும், சுகவாழ்வுவரும் என்று திரும்பத் திரும்ப எத்தனை முறை சொல்லிக் கொண்டே இருப்பது—நலிவு தலைவிரித்தாடி டும் நிலை நீடிக்கும்போது—எப்படிச் சுண் டக்கறி சமைத்து சுதந்திர விருந்து வைக்க முடியும் என்று கேட்கவேண்டிய விதமாக உள்ளம் நைந்த நிலையில் சிந்தனையாளர்கள் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது என்ப தால்.

திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க என்ருல் ஆகா தய்யா!! வேறு ஆளைப் பாருமய்யா!! என்று கூறிடும் முறையிலே கவிதை இருப்பது, மேலும் மேலும் மக்களை மயக்க நிலையில் வைத்திருக்கும் காரியத்தில் ஈடுபட மனம் இசையவில்லை என்று அறிவாளர் பலரும் கருதுகின்றனர் என்பதைக் காட்டுகிறது என்பதால்.

சென்ற கிழமை நான் கூறினேனே தம்பி! சுயராஜ் யம்' என்ற சொல் கிளறிவிட்ட ஆசைக் கனவுகள் பல; சுவை மிக்கன; எனவே அந்தச் சொல் கேட்டு மக்கள் சொக்கிக் கிடந்தனர் என்று, அந்த நிலையி லிருந்து விடுபட முனைகின்றனர் விளக்கம் பெற்ருேர் என்பதனைக் காட்ட உதவுகிறது இந்தக் கவிதை என்ப தைத்தான் முக்கியமானதாகக் கொள்கிறேன்.

அந்தச் சுண்டக்கறி சமைத்தளிக்கவே சலிப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது—நெடுநாட்களாக இன்பநிலை வரப்போகிறது என்று எடுத்துக் கூறிவந்தவர்களுக்கு.

புதியவர்கள் விறுவிறுப்பாகத்தான் இருப்பார் கள்; அவர்கள் மக்களை அந்தப் பழைய பேச்சிலேயே சொக்கவைக்க முடியும், சொல்லில் சுவை கூட்டி, சந்த இனிமை காட்டி என்று எண்ணுகின்றனர்.

'சுரபி'—என்னத்தைப் பாட ஐயா! என்று சலிப் புடன் கேட்பது போலத்தான், சுதந்திர ஆட்சியின் அருமை பெருமை, அந்தச் சுதந்திரம் பெற்றிட காட் டப்பட்ட வீரம் தியாகம் ஆகியவை பற்றிய சிந்து களைக் கேட்டுக் கேட்டு, மக்கள் சலிப்படைந்து போய் விட்டுள்ளனர்.

பொற்கோழி கூவிற்று பொழுது புலர்ந்தது என்ற நிலை இருக்கும்போதுதான், சேவலின் கூவல் இசை போன்றிருக்கிறது—மற்றப் போதினில் அது 'கத்தல்' ஆகிறது, காது குடைகிறது,

சுதந்திர ஆட்சி, மக்களை நிம்மதியான வாழ்வு பெறச் செய்திருந்திருந்தால், சிந்து பாடிடவும் மனம் இடம் தரும், கேட்டிடவும் இனிமை பயக்கும். இப் போது சலிப்பு மட்டுமல்ல—கேலி செய்வது போலவே கூட இருக்கிறது.

கவிஞர் என்னத்தைப் பாட ஐயா! என்று சலிப் புடன் கேட்பது போலவே, ஆளவந்தார்களும், சுய ராஜ்யத்தின் அருமை பெருமை பற்றிச் சுவையூட்டும் பேச்சுப் பேசி பதினெட்டுக்கும் அதிகமான ஆண்டுகள் ஓட்டிவிட்டோம், பதவியைக் காப்பாற்றிக் கொண்டு விட்டோம், மேலும் மக்களை நமது பிடியிலே வைத் திருக்க "என்னத்தை எடுத்துக் காட்டுவது" என்று யோசித்துப் பார்த்து, தயாரித்த சுவைப் பானந்தான் தம்பி! சோஷியலிசம் பற்றிய பேச்சு.

சுயராஜ்யம் வருகிறது உன் வாழ்வு துலங்கப் போகிறது என்று ஆண்டு பல பேசியாகிவிட்டது. அதன் சுவை குறைந்து விட்டது. ஆகவே சோஷியலிசம் வருகிறது, உன் இன்னல் ஒழிந்துவிடப் போகிறது; உனக்குப் புதுவாழ்வு கிடைக்கப் போகிறது என்ற புதியபேச்சு ஆரம்பமாகி இருக்கிறது.

இது நெஞ்சக் குழியில் இருந்து சுரப்பது அல்ல; நேர்த்தியாக நெய்யப்பட்டுள்ள சொல் லாடை!!

"காஞ்சி"

இரண்டாம்

ஆண்டு மலர்

அண்ணாவின்

அரிய பல படைப்புகளுடன்,

முன்னணியினர் பலரது கதை, கட்டுரை, கவிதை முதலானவைகளும் மிளிர,

மணமிக்க மலர் தயாராகிறது!

வாழ்வு துலங்க வகைசெய்ததென்னென்ன?

காங்கிரஸ் பிரசாரகர்கள் 'சுண்டக் கறி' சமைத்துக் கொடுத்துச் சலிப்படைந்து கிடந்த நேரத்தில் 'சுடச் சுட' புதுச்சரக்கு இதோ! என்று தலைவர்கள் சொன்னதும், மகிழ்ச்சி அடைந்து கூவிக் கூவி விற்கிறார்கள்! ஆதாயம் நிரம்பக் கிடைக்கும் என்றும் நம்புகிறார்கள். விவரம் தெரிந்தவர்கள் விளக்கம் கேட்கிறார்கள். "சோஷியலிசம் பேசுகிறீர்கள், கேட்க இனிப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் திட்டம் என்ன காட்டுகிறீர்கள்? **சோஷியலிசம் என்பது ஒரு இலட்சியம் —அதை அடைவதற்கான திட்டம் என்ன மேற்கொண்டிருக்கிறீர்கள்?** என்று கேட்கும்போது, காங்கிரஸ் பேச்சாளர்களுக்குக் கோபம் வருகிறது—பதில் கூற முடியாததால்.

> ஏழையின் இன்னலைத் துடைக்கப் போகிறோம்.
>
> ஏழைக்குச் சோறு, துணி, வீடு, வேலை எல்லாம் கிடைத்திடச் செய்யப் போகிறோம்.

என்று கூறுகிறார்கள். மகிழத்தக்கதுதான்! ஆனால் எப்படி? என்று கேட்டால் பதிலைக் காணோம்!!

எப்படி ஏழைக்கு நல்வாழ்வு தரப் போகிறீர்கள் என்ற கேள்விக்கு முன்னதாக மற்றோர் கேள்வியும் எழுகிறது.

> **ஏன் ஏழை, ஏழையாக இருக்கிறான்?**
>
> **எப்படி அவன் ஏழையானான்?**
>
> என்ன காரணத்தால் பலர் ஏழைகளாகவும் ஒரு சிலர் மட்டும் செல்வர்களாகவும் இருந்து வருகின்றனர்?

இந்த அடிப்படைக் கேள்வியின் தொடர்பாக வேறோர் கேள்வியும் பிறக்கிறது.

> ஏழையின் வாழ்வு துலங்கும்படிச் செய்யப்போகிறோம் என்கிறீர்களே, பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்து வருகின்றீர்களே, இந்த உங்கள் ஆட்சியிலே ஏழையின் வாழ்வு துலங்க என்ன செய்திருக்கிறீர்கள். எந்த அளவு வெற்றி கிடைத்திருக்கிறது?

இந்தக் கேள்விகளை நாம் எழுப்பும்போது தம்பி! ஒன்று தெளிவாகத் தெரிவித்துவிடுகிறோம்,

> **சோஷியலிசம் கூடாது என்றோ**
>
> **சோஷியலிசம் கிடைக்காது என்றோ**

நாம் கருதவுமில்லை, கூறவுமில்லை. சோஷியலிசத்தை வரவேற்கிறோம்; அதேபோது விளக்கம் கேட்கிறோம். அந்தப் புனிதமான இலட்சியத்தைச் செயல்படுத்தத் தக்க வழிமுறைகள் என்ன கொண்டிருக்கிறீர்கள், கூறுங்கள் என்று கேட்கிறோம்.

காங்கிரஸ் ஆளுங்கட்சியாவதற்குமுன்பே, ஆளுங்கட்சி ஆகப்போகிறது என்று தெரிந்த உடனே, மோப்பம் பிடித்துக்கொண்டு காட்டு விலங்குகள் இரைதேடுவதுபோல, சீமான்கள் காங்கிரசின் நண்பர்களாகிவிட்டனர்! வழிகாட்டிகளாகிவிட்டனர்! காங்கிரசை ஊட்டி வளர்ப்பவர்களாகிவிட்டனர். இதை எந்தக் காங்கிரஸ்காரரும் மறுக்கமாட்டார்; புதிதுகள் தவிர!

ஆட்சி நடத்திடக் காங்கிரஸ் முன்வந்தபிறகு, இந்த உறவு மேலும் வலுப்பட்டுவிட்டது; சிற்றரசர்கள், சீமான்கள் வணிகக் கோமான்கள் பெரும்பாலோர் இன்று காங்கிரஸ் கட்சியில் உள்ளனர்; மறுத்திட இயலாது.

> ஆனால் இவர்கள் தமது இயல்பை மாற்றிக்கொண்டவர்கள்—தேசியவாதிகள் —காந்தியர்கள் என்று வாதாடுகிறார்கள், இது சாதுப்புலி, சைவப்புலி, சன்யாசிப்புலி என்று கூறுவதுபோன்ற வேடிக்கையான வாதம்.

காங்கிரசிலே சேர்ந்துள்ள எந்த நிலப் பிரபுவும், தன் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, எல்லோரும் போல நானும் வாழ்வேன் என்று கூறிக்கொள்ளும் 'கருணாமூர்த்தி'யாகிவிடவில்லை.

இப்போதும் அவர் பெரிய பண்ணை நடத்துகிறார், ஆள் அம்பு ஏராளம், கொடுக்கல் வாங்கல் எப்போதும் போல, கட்டிவைத்து அடிப்பதுகூட நடந்துவருகிறது; மாளிகையிலே கொலு இருக்கிறார்; வைரம் மின்னுகிறது; எந்த மெருகும் குறையவில்லை.

> ஒரே ஒரு 'தியாகம்' செய்கிறார்! நாலு பேர் முன்னாலே வரும்போது புன்னகை காட்டுகிறார்; புதிய கதர்ச்சட்டைபோடுகிறார்.

மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்துவருகிறானே உழவன் அவன் இப்போதும், சேரியிலும் பாதை ஓரத்திலும்தான் இருக்கிறான்; பண்ணையாரின் தயவு இருக்கும் வரையில்தான் அவனுக்குப் பிழைப்பு.

பிழைப்பு! என்ன மாறுதல் அந்தப் பிழைப்பிலே காணுகிறான்? அதே ஏழ்மை — கவலை—திகைப்பு—திகில். ஒரே ஒரு மாறுதல்!

> ஐயாவும் காங்கிரஸ்
>
> நானும் காங்கிரஸ்

என்று கூறமுடிகிறது. அவ்வளவுதான்.

கலெக்டர் எப்போதும்போல, பண்ணையார் மாளிகைக்குத்தான் வருகிறார். "பண்ணையாட்கள் இப்படித்தான், ஏதாவதுதகராறுகிளப்பிக்கொண்டுதான் இருப்பார்கள்! நான்பத்துப்போலீஸ் அனுப்பிவைக்கிறேன்" என்று தைரியம் தருகிறார்.

தாசில்தாரருக்கு எப்போதும்போல பண்ணையார் ஆள் அனுப்பிவைக்கிறார், 'இன்னார் நமக்கு ரொம்பவும் வேண்டியவர், கவனியுங்கள்' என்று. ஆகட்டும் என்று பதில் அனுப்புகிறார் அதிகாரி; முன்புபோலவே.

போலீஸ் அதிகாரிகள், முன்புபோலவே, பெரிய பண்ணையாருடைய புன்னகையை விருந்தாகக்கொள்கிறார்கள்.

ஒரு மாறுதலும் ஏற்படவில்லை; ஏற்படாது,

நிலப்பிரபு ஆகட்டும் தொழிலதிபராகட்டும், அவர்களுக்கு ஒரு தனி 'இயல்பு' எப்படி ஏற்பட்டுவிடுகிறது?

எத்தனைப்பேர் தம்பி, இயல்பு மாறினர்?

அந்த இயல்புக்குக்காரணம், தன்னிடம் நிறையச் செல்வம் இருக்கிறது, புதிய செல்வமும் சேர்ந்து வருகிறது என்ற உணர்வு, அவருக்கு, தான்பிறரை அடக்கி ஆளத்தக்கவர் என்ற இயல்பைக்கொடுக்கிறது. அவரிடம் குவிந்துகிடக்கும் செல்வத்தைக் கண்டதாலே ஏழையர் பலரும் அவர்முன் குனிந்து நிற்கிறார்கள்; பணிவுகாட்டுகிறார்கள். பலர் தன்முன் குனிந்து நிற்பதைக் காண்பதால் அவருக்குத் தன்னாலே 'நிமிர்ந்து நிற்கும்' இயல்பு வளருகிறது.

இந்த இயல்பு எதனால் ஏற்படுகிறதோ அதனை மாற்றினாலொழிய, இயல்பு எப்படிப் போகும்?

இவ்விதமாகவெல்லாம் கேட்டிடின் தம்பி! காங்கிரசார் கோபம்கொள்கிறார்கள். கோபத்துக்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்கு உள்ளூற நாம் கூறுவது உண்மை என்று படுகிறது. அந்த உண்மை உள்ளத்தைக் குத்துவதாலே ஒரு எரிச்சல். பாவம், அந்த எரிச்சலைத் தீர்த்துக்கொள்ள, நம்மை ஏசுகிறார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு ஆறுதல், அந்தவகையிலே, தம்பி, நாம் அவர்களுக்கு ஒருவிதமான உதவிகூடச் செய்கிறோம் என்று கூறலாம்.

செல்வம், நிலமாகவோ தொழில்அமைப்பாகவோ சிலரிடமே இருந்திட எவ்வளவு நாள் அரசு அனுமதித்துக்கொண்டு வருகிறதோ அந்த நாள் வரையில், அதற்கு ஏற்ற இயல்பு இருந்துதான் தீரும்.

செல்வம் ஒரு சிலரிடம் குவிந்திருப்பது அவர்களுக்குத் தனி இயல்பைத் தருகிறது என்று நான் கூறும்போது செருக்கு, கொடுமை செய்திடும்போக்கு, ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடவில்லை. செல்வர்களிலே செருக்கற்றவர்களே இல்லையா என்றோ செல்வமே இல்லாமல் கூட செருக்குடன் திரிபவர்கள் கிடையாதோ என்றோ கேட்டுவிடாதே. செருக்கும் கொடுமை செய்திடும் போக்கும் கொண்ட இயல்பைப்பற்றிய ஆராய்ச்சியை நான் இங்கு நடத்தவில்லை.

நாம் பணக்காரர், நம்மிடம் பணம் இருப்பதால், பண மற்றவர்கள் நம்மிடம் பணிவுடன் இருக்கிறார்கள்.

நாம் பணம் படைத்தவர்கள்.

பணம் படைத்தவர்களாக இருப்பதால் நிம்மதியான, நாலு பேர் கண்டு மதிக்கத் தக்க வாழ்வு நடத்த முடிகிறது.

நாம் பணம் படைத்தவர்கள். அதனால் நாம் தொழிலை நடத்திட வசதி பெற்றிருக்கிறோம். நாம் தொழில் நடத்தினால் பலரும் நம்மிடம் வேலை செய்திட வருவார்கள். நம்மிடம் வேலை செய்து பிழைப்பதால், நம்மை 'முதலாளி'யாகக் கொள்கிறார்கள்!

ஆக நாம் ஒரு 'அரசு' நடத்த முடிகிறது.

இந்தவிதமான உணர்வுகள் ஊட்டி வளர்த்திடும் இயல்பு பற்றித்தான் கூறுகிறேன்.

தம்பி! இதிலே நாம் கவனிக்கவேண்டிய ஒன்று தொக்கி நிற்கிறது.

எந்தச் செல்வம் தனக்கு ஒரு தனி செல்வாக்கையும் மதிப்பையும் பெற்றுத் தந்து வருகிறதோ, அந்தச் செல்வத்தை இழந்துவிடக் கூடாது என்ற உணர்வும்; அந்தச் செல்வம் போய்விட்டால், முன்புபோலச் செல்வாக்கும் மதிப்பும் கிடைக்காது என்ற அச்சமும், ஆகவே அந்தச் செல்வத்தைக் கட்டிக் காப்பாற்றியாக வேண்டும் என்ற உறுதியும், அந்தச் செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எல்லா முறைகளையும் மேற்கொண்டாகவேண்டும் என்ற துணிவும், அவர்களுக்கு இயல்புகளாகிவிடுகின்றன.

பாம்புப் புற்றுக்குப் பால் வார்க்கும் தருமமும், எறும்புகளுக்கு அரிசி போடும் தருமமும், காக்கை கழுகுகளுக்குத் தின்பண்டம் போடும் தருமமும் செய்திடுவதிலே விருப்பமும் பழக்கமும் கொண்ட 'முதலாளிகள்' அதிக விலைக்குப் பண்டத்தை விற்பதற்கோ, கள்ள மார்க்கட் நடத்துவதற்கோ, பொய்க் கணக்கு எழுதுவதற்கோ, கடன்பட்டவன் கதறிடும்போது அந்தக் கண்ணீரைக் கண்டும் மனதைக் கல்லாக்கிக் கொள்ளுவதற்கோ துளியும் தயங்குவதில்லை அல்லவா!

அரிசியில் வேண்டுமென்றே கல்லையும் மண்ணையும் கலந்து, ஒரு படியை ஒன்னறைபடியாக்கி விற்றிடும் 'அக்ரமம்' செய்திடும் அதே 'முதலாளி,' கோயிலிலே உற்சவம் நடத்தி, வெண்பொங்கல் பிரசாதம், பத்தர்களுக்கும் ஏழைகளுக்கும், வழங்கிடும் 'புண்யம்' செய்கிறார்! பார்த்திருக்கலாமே! நான் அதை மட்டும் அல்ல, தம்பி! அந்தப் 'புண்யவான்,' அந்தப் பொங்கலில் 'கல்' ஒன்றிரண்டு இருந்திடக் கண்டு கடுங்கோபம்கொண்டு என்ன அநியாயமய்யா இது! என்று கேட்டதையும் கண்டிருக்கிறேன்.

செல்வவான்கள் தமக்குச் சமூகத்திலே கிடைத்திருக்கிற 'இடம்' தம்மிடம் உள்ள செல்வத்தின் காரணமாகத்தான் என்பதை உணர்ந்திருக்கும்போது அந்தச் செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும்தான் முனைந்து நிற்பார்கள். அஃது அவர்களின் இயல்பு ஆகிவிடுகிறது.

ஆகவே காங்கிரசில் சேர்ந்துகொண்ட செல்வர்கள் தமது இயல்பை மாற்றிக் கொண்டவர்கள் என்று வாதாடுவதிலே பொருள் இல்லை.

அவர்களுக்குள்ள இயல்பை மாற்றிக்கொள்ளச் செய்வோம் என்று சில காங்கிரஸ்காரர் பேசக் கேட்டிருக்கிறேன். 'மகாத்மா'வாக, காந்தியாரை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்த செல்வர்கள் பணக்காரர்கள் தம்மிடம் உள்ள செல்வம் தம்முடைய சுகபோகத்துக்காக என்று கருதாமல், சமூகத்தின் நன்மைக்காக அந்தச் செல்வம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது, தாம் அந்தச் செல்வத்தை சமூக நன்மைக்காகப் பயன்படுத்தும் செயலை மேற்கொண்டுள்ள 'தர்மகர்த்தாக்கள்' என்ற எண்ணத்துடன் நடந்துகொள்ள

நிற்பது கூண்டில்; வழங்குவது தீர்ப்பு!

வேண்டும் என்ற உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்திட முற்பட்டனரா? இல்லையே!

> ஊசியின் காதிலே ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம், பணக்காரன் பரமண்டலத்துக்குள்ளே நுழைய முடியாது.

> பிறந்தபோது கொண்டு வந்ததில்லை, போகும்போது கொண்டு செல்லப் போவதுமில்லை என்றும்,

> செல்வம் நிலைக்காது, அது செல்வோம், செல்வோம், என்று செப்பிக்கொண்டே இருப்பதாகும் என்றும்

எப்படி எப்படியெல்லாமோ கூறிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கதர்ச் சட்டை போட்டுவிடுவதாலா அந்த இயல்பு மாறிவிடும். மாறாது. ஆகவேதான், இத்தனை சிற்றரசர்களை, சீமான்களை, தொழிலதிபர்களை, வியாபாரக் கோமான்களை சேர்த்து வைத்துக்கொண்டு சோஷியலிசம் பேசுகிறீர்களே, இதிலே நேர்மை கூட இருப்பதாகத் தெரியவில்லையே; அருள் மொழிகளே அவர்களின் இயல்பை மாற்றிடவில்லையே உங்கள் பேச்சா அவர்களின் இயல்பை மாற்றிவிடும் என்று நாம் கேட்கிறோம்,

இவ்வளவு விளக்கமாகக் கேட்பதுதான் தம்பி! அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டிவிடுகிறது.

புரோகிதரிடம் சொல்லிப் பாரேன், எங்கள் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரையே குடத்திலே கொண்டு வரச் செய்து, மாவிலை சொருகிவிட்டு 'கங்கா தீர்த்தம்' என்று கூறி எங்கள் தலையிலேயே தெளிக்கிறீரே ஐயா! இது என்ன வேடிக்கை! என்று. அவராவது சிரிப்பார்! மற்ற பெரியவர்களுக்குத்தான் கோபம் பீறிட்டுக்கொண்டு வரும்; "இது என்ன போக்கிரித்தனமான கேள்வி" என்பார்கள்.

அதுபோல ஒரு வேடிக்கை நடத்துகிறார்கள், ஊரிலுள்ள அத்தனைப் பணக்காரர்களையும் படைதிரட்டி வைத்துக்கொண்டு, நாங்கள் சோஷியலிசத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று.

நாட்டிலே இன்று சீமான்களிடம் உள்ள செல்வம் முழுவதையும் பறித்து, ஒரு இடத்திலே குவித்து வைத்து, நாட்டு மக்கள் அனைவருக்கும் அந்தச் செல்வத்தை சமமாகப் பங்கு போட்டுக் கொடுத்து விடுவது தான் முறை, சோஷியலிசம் அதுதான். ஆகவே அதைச் செய்யுங்கள் என்று நாம் கூறுவதாகக் கற்பித்துக்கொண்டு, வக்கணை பேசுவதிலே வல்லவர்கள் கேட்கிறார்கள்.

> உள்ள செல்வத்தைப் பங்கு போட்டால் ஆளுக்கு பத்து பைசாகூட வராதே! தெரியுமா? என்று.

இப்போது உள்ள செல்வத்தைப் பங்கு போடச் சொல்லிக் கேட்பதுதான் சோஷியலிசம் என்று யாரும் கூறிடவில்லை.

> செல்வ உற்பத்திக்கான சாதனங்கள், வாய்ப்புகள், ஒரு சிலரிடம் மட்டும் அவர்கள் செல்வம் படைத்தவர்களாக இருப்பதால் சிக்கிக் கொள்கின்றன. அந்தச் சாதனங்களும் வாய்ப்புகளும் பணம் படைத்த சிலரிடம் சிக்கிக் கொள்வதால் அவர்களிடமே மேலும் மேலும் செல்வம் போய்ச் சேர்ந்து விடுகிறது. செல்வம் இவ்விதம் சிலரிடமே சென்று அடைபட்டு விடுவதால், மிகப் பலரின் வாழ்க்கை செல்லரித்ததாகி விடுகிறது. இந்த முறையை மாற்றுவதுதான், சோஷியலிசம்.

> **செல்வ உற்பத்திக்கான சாதனங்களையும் வாய்ப்புகளையும் ஒரு சிலரிடமே விட்டுவைக்கும் முறையை மாற்றாத வரையில், ஏழையின் வாழ்விலே முன்னேற்றம் காண முடியாது.**

இந்த நோக்கத்துடன், இந்த வழியில் காங்கிரஸ் அரசு திட்டமிட்டு வேலை செய்கிறதா என்பதுதான், மிக முக்கியமான கேள்வி.

> இந்த முறையிலே இந்நாள் வரையில் காங்கிரஸ் அரசு வேலை செய்யவில்லை.

> இந்த முறையிலே வேலை செய்யாததால்தான் இத்தனை ஆண்டுகளாக உற்பத்தியான செல்வம் சமூகத்தில் பரவலாக்கப்படவில்லை; ஒரு சிலரிடம் முடங்கிவிட்டிருக்கிறது.

> அப்படிச் சமூகத்தில் பரவிடாமல், ஒரு சிலரிடம் செல்வம் குவிந்துவிட்டதனால்தான், ஏழை மேலும் ஏழையாகிறான் பணக்காரன் மேலும் பணக்காரனாகி இருக்கிறான் என்று கூறப்படுகிறது.

இப்போது காங்கிரஸ் அரசு இத்தனை ஆண்டுகளாக, செல்வம் ஒரு சிலரிடம் சென்று குவிந்துவிட இடம் கொடுத்ததற்கும், உடந்தையாக இருந்ததற்கும், அதிலே (தேர்தல்நிதி என்ற முறையில்) பங்குபெற்றதற்கும், சமூகத்திடம் மன்னிப்புக் கேட்கவும், சமூகம் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய, குற்றவாளி நிலையில் இருக்கிறது.

குற்றவாளிக் கூண்டிலே நின்றுகொண்டே, காங்கிரஸ் அரசு, தீர்ப்பு அளிக்கிறது, நாட்டிலே சோஷியலிசம் கொண்டுவர என்னினும் தகுதி உள்ளவர்கள் எவரும் இல்லை, என்று.

இந்தக்கொடுமையையும் இந்நாடு தாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது.

செல்வம், செல்வப் பெருக்கத்திற்கான சாதனங்கள். வாய்ப்புகள் சமூகத்தில் பரவலாக்கப்படாமல், ஒருசிலரிடம் மட்டுமே குவிந்துவிட்டது என்பதனைக் காங்கிரஸ்தலைவர்களே ஒப்புக்கொண்டாகிவிட்டது.

> ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் புதிதாக உற்பத்தியான செல்வம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை என்று துவக்கத்தில் பேசிய காமராஜர், இப்போது வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுவிட்டிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்டங்களால் உற்பத்தியான செல்வம் இதுவரையில் பணக்காரர்களுக்கு மட்டுமே பயன்பட்டு இருக்கிறது என்று.

இவர், ஏதோ இதுநாள்வரையில் இந்த நாட்டிலே இல்

ஓட்டாண்டியாக்கிய உமக்கா ஓட்டு?

லாதவர்போலவும், என்ன நடக்கிறது என்பதனைக் காணும் இடத்திலே இவர் இருக்கவில்லை என்பது போலவும், யாரோ மூட்டிவிட்ட தீவினை இது என்ற முறையிலும் பேசுகிறார்.

இந்த நாட்டிலே மட்டுமே இத்தகைய பேச்சைப் பேசமுடியும்.

ஜனநாயக உணர்வு செம்மையாக உள்ள வேறு எந்த நாட்டிலே இதுபோலப் பேசிடினும், என்ன கேட்பார்கள்?

என்னய்யா! மாய்மாலம் பேசுகிறீர்! உம்முடைய கட்சி அல்லவா இந்த ஐந்தாண்டுத் திட்டங்களை நடத்திற்று, நீரும் அந்தக் கட்சியிலே தலைமை இடத்திலே இருந்து வந்தீரே! எட்டு ஆண்டுகள் நாட்டை ஆண்டுகொண்டிருந்தீரே! அப்போதுதானே இந்த அக்ரமம் ஏற்பட்டது! நீரும் சேர்ந்துதானே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன், பணக்காரர்களுக்குப் போய்ச்சேர்ந்துவிடும் அக்ரமத்தை நடத்திவைத்திர். இப்போது யாரோ செய்துவிட்டார்கள் என்ற முறையிலே பேசுகின்றீரே? உள்ளபடி என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதே உமக்குத் தெரியாமலிருந்துவந்ததா? தெரிந்தும் அந்த அக்ரமத்தைத் தடுக்கத் துணிவு எழவில்லையா? தடுக்க முயற்சித்தும் அது நடக்கவில்லையா? என்றெல்லாம் கேட்பார்கள்.

இந்த நாட்டிலே தம்பி! பெரிய இடத்தில் உள்ளவர்களின் பகை நமக்கு ஏன் என்ற போக்கு காரணமாக, இதைக் கேட்கப் பலரும் தயக்கப்படுகிறார்கள். நாம்தான் கேட்கிறோம். அதனால்தான் நம்மிடம் அத்தனை ஆத்திரம் அவர்களுக்கு; ஆளவந்தார்களுக்கு.

நாம் அதனைக் கேட்பதுகூடத் தம்பி! குற்றம் செய்தவர்களை அம்பலப்படுத்தவேண்டும் என்ற உணர்வு காரணமாக அல்ல,

நடைபெற்ற குற்றம்என்ன என்று கண்டறிந்தாலொழிய, இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும் நடைபெற்றுவிட்ட 'அக்ரமம்' மறுபடியும் நடைபெறாமல் தடுத்திட வழி கிடைக்காதே என்பதற்காக.

காமராஜர், இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் கிடைத்த செல்வம் பணக்காரர்களுக்கே பயன்பட்டு வருகிறது என்றுதான் கூறினாரே தவிர — அதிலும் அந்த உண்மையை **மகனலோபிஸ் குழுவினரின் ஆய்வுரை** அறிவித்த பிறகு—நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் இடித்துரைத்தபிறகு—பொருளாதார விற்பன்னர்கள் விளக்கிக் காட்டிய பிறகு ஒப்புக்கொண்டார்—மறுபடியும் அதே கெடுதல் ஏற்படாமலிருக்க என்ன முறை மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று கூறவில்லை. ஆகவேதான் குற்றம் செய்தவர்கள் எவர் என்பதும், ஏன் அந்தக் குற்றம் செய்தார்கள் என்பதும், தெளிவாக்கப்படவேண்டும் என்கின்றோம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமும் உற்பத்தியான செல்வம் பணக்காரர்களுக்கே பயனபட்டு வந்திருக்கிறது என்று வெளிப்படையாகக் காமராஜர் கூறியான பிறகு, ஏமாற்றத்துக்கு ஆளாக்கப்பட்ட ஏழை மக்கள், உழைத்து அதன் பலனை முழு அளவில் பெறாமல் தவித்திடும் பாட்டாளி மக்கள், தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டாமா? தெரிவித்தால் தானே இனியும் இந்த அக்ரமம் நடைபெற்றிடக் கூடாது என்ற உணர்வு ஆளவந்தார்களுக்கு ஏற்படும்.

அந்தக் கண்டனத்தைத் தெரிவிக்கும், நியாயமான, சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழி தானே தேர்தல்.

அந்தத் தேர்தலின்போது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் கிடைத்த பலனைப் பணக்காரர்கள் மட்டுமே பெற்றுவிட்டனர், அதற்கு நீவிர் உடந்தையாக இருந்து வந்தீர்கள்! **நாங்கள் உழைத்தோம்! அவர்கள் கொழுத்தார்கள்! நீங்கள் அதற்கு வழி செய்து கொடுத்தீர்கள்! எம்மை ஓட்டாண்டியாக்கிவிட்டு, மறுபடியும் எம்மையா ஓட்டுக் கேட்கிறீர்கள் என்று இந்நாட்டு ஏழை மக்கள் கேட்டிடவேண்டும்.**

"என்னத்தைப் பாட ஐயா!" என்று கேட்டார், கவிஞர் சுரபி.

எனக்குக் கவிதை தீட்டிடத் தெரியாது. ஆனால் கவிதை இயற்றிடும் திறமையுள்ளவர் இவை பற்றி எழுதிடலாகாதா?

ஏழை ஏமாற்றப்பட்டது பற்றி எழுதிடலாமே!

ஏழை மேலும் ஏழை ஆகிடத்தக்கவிதமான முறைகள் இருந்து வருவதுபற்றி எழுதிடலாமே!

இனியாகிலும் இப்படிச் செய்யுங்கள் ஐயா! என்று வழி முறை பற்றி எடுத்து எழுதலாமே!

கருத்து சுரக்கும், ஐயமில்லை! கவிதைக்குத் தேவைப்படும் எதுகை மோனைக்குக் குறைவுமில்லை. ஆனால் ஒரே ஒரு தொல்லை. ஆட்சியினர் சீறுவர்?

கவி பாடக்கற்றதனால் பயன்
என்கொல்
காவலர் சீறுவரோ என்றஞ்சிடின்!

என்று கேட்கத்தோன்றுகிறதா தம்பி! நமக்கேன் வீண் வேலை. நமக்குத் தெரிந்த முறையில் நாட்டினருக்கு

வருந்துகிறோம்

தலைமைக் கழகச் செயலாளர் கே. ஏ. மதியழகன் அவர்களது தந்தையார் அருணசலம் அவாகள் 27—7—66 அன்று இயற்கை எய்திய செய்தியறிந்து வருந்துகிறோம்.

தந்தையின் இழப்பால் வருந்தும் மதியழகன், கிருஷ்ணசாமி ஆகியோருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிவகெங்கைச் சீமைக்குச் சீர்காண வாராய்!

உண்மைதனை எடுத்துச் சொல்வோம்; கடமையைச் செய்திடுவோம்.

இந்தக் கடமையாற்றும் பணியின் ஒரு பகுதியாகத்தான் நாம் அங்கங்கே மாநாடுகள் நடாத்திக் கொண்டு வருகிறோம். அடுத்து சிவகெங்கையில் நடத்துகிறோம்.

சிவகெங்கைச் சீமையைப்பற்றி இனிமேல் நான் எடுத்துக்காட்டித்தான் நீ புரிந்துகொள்ளப்போகிறாயா? தம்பி!

மானங் காத்த மருதிருவரைத் தந்த மண்டலமாயிற்றே அது; எனக்குச் சொந்தமான இந்த மண்ணுக்கு இன்னொருவன் உரிமை கூறுவதா? என வெகுண்டெழுந்து மறப்போர் புரிந்து—மானத்துக்காக உயிர்விட்ட பெருமைக் குரிய இடம்!

அங்கே நாம் கூடுகிறோம்; நமக்குரிய எதிர்காலத்தை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் திட்டங்களை வகுக்கக் கூடுகிறோம்.

சிவகெங்கை மாநாட்டுக்கு மன்னை நாராயணசாமி தலைமை வகிக்க இருக்கிறார். சுறுசுறுப்புமிக்கவர்; சுற்றிச் சுற்றிச் செயலாற்றும் தீரர்! உழவர் பெரும்படையின் உள்ளம் உணர்ந்தவர் அவர்.

தீந்தமிழ்ச் சொற்களால்—தேமதுரத் தமிழால் தேனினுமினிய கவிதையாத்து, கவின் காட்சிப் படைத்து களம் அமைக்கும் வேழவேந்தன் உன்னையெல்லாம் வரவேற்கப்போகிறார்.

பொல்லாத ஆட்சியதன் புன்மைகளையெல்லாம் புரட்டிக் காட்டிடுவார் அவர்.

கழக முன்னணித் தலைவர்கள் அனைவரும் அங்கே நல்ல நல்ல கருத்து விருந்து படைக்கப் போகிறார்கள்!

தம்பி! நீ அந்தவிருந்தைச் சுவைக்கவேண்டாமோ? உன்னைச் சார்ந்தவர்களைச் சுவைக்கச் செய்ய வேண்டாமோ?

வந்திடு! மலர்ந்த உன் முகத்தால் ஒளி தந்திடு! ஒளிமிகுந்த அந்த முகங்களையெல்லாம் கண்ணாரக் கண்டு களிக்கவென்றே நான், புறப்பட்டுவிட்டேன் சிவகெங்கைக்கு.

அண்ணன்,

அண்ணாதுரை

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும் உலோகங்கள், அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்கள் சேர்ந்து உருவாக்கிய

டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளையின்

சித்தர் நவலோக கல்பம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. தொலைபேசி: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கு

பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்,
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் மாமண்டூரிலும்

டாக்டர் சாது V. நாராயணசாமி பிள்ளை அவர்களைக் கலந்து குணம் பெறலாம்.

சோலையப்பனை விடுவிக்கும் தனது திட்டத்தைப்பற்றி விவரித்தான் மாரிமுத்து.

“சோலையப்பன் அடைபட்டிருக்கும் சிறைக்குக் காவலாகத் தூமகேது, பாண்டிய வீரர்களை வைக்கவில்லை! பாண்டிய வீரர்கள் ஒருவேளை துரோகம் செய்தாலும் செய்வார்கள் அல்லவா? அப்படிச்செய்ய இடமிருக்கிறது அல்லவா? தங்களது மதிப்பிற்குரிய தளபதியாக இருந்த உத்தமரின் மகன் சிறையில் சிக்கி சித்தம் நோவதைக் கண்டு, அந்த வீரர்களின் உள்ளம் அனல்பட்ட மெழுகாகுலும் ஆகலாம் அல்லவா? சோலையப்பன்மீது இரக்கம் கொண்டாலும்கொள்வார்கள் அல்லவா? எதற்காக இப்படியொரு புதிய குழப்பத்திற்கு இடம் தரவேண்டுமென்று எண்ணி, அவன் சோழ நாட்டு வீரர்களையே சிறைக்குக் காவல் வைத்திருக்கிறுன்! தங்கள் மீது நம்பிக்கை இல்லாமையினுல்தான் ஒற்றர் நாயகம் இப்படிச் செய்திருக்கிறுன் என்ற எண்ணம், பாண்டிய நாட்டு வீரர்களின் மனத்தில் உண்டாகிவிட்டிருக்கிறது! அந்த அதிருப்தியை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!”

“எப்படியென்று புரியும்படிச் சொல், மாரிமுத்து!”

“இராசராசக் கற்குடிமாராயன், இராஜகம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வான் ஆகிய சோழனின் தளபதிகளுக்கு அரசாங்கத்திலிருக்கும் செல்வாக்கு, நமக்கு இல்லையே என்று தளபதி பாண்டிராசன் மிகவும் சோர்வுற்றிருப்பதாகத் தெரிகிறது! அது மட்டுமல்ல, தூமகேதுவை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு இருக்க வேண்டுமென்று நான் யூகிக்கிறேன்! எப்படியென்ருல், தூமகேதுவின் அட்டகாசங்களுக்கு அதிகமாக வளைந்து தராதபடி அரசனை அவர்தான் தூண்டிவிடுவதாக, சோழநாட்டு வீரர்கள் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன்! ஆகவே ஒற்றர் நாயகத்திற்கு எதிரிடையாகச் செய்யப்படும் காரியங்களுக்கு, பாண்டிய ராசரின் மறைமுகமான ஆதரவு கிடைக்கலாம்? இந்தச் சூழ்நிலையை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது! அரசரோ ஊரில் இல்லை! தூமகேதுவோ சோழ நாடு சென்றிருக்கிறுன். இதைப்போன்ற நல்ல சமயம் வாய்ப்பது அரிது! சோலையப்பனைச் சிறையில் அடைத்தது அக்கிரமம், அநீதி என்றமுழக்கத்தோடு ஒரு சிறிய படையை இரகசியமாகத் திரட்டவேண்டும்!...”

“படையொன்றைஇரகசியமாகத் திரட்ட வேண்டுமா!” என்று கேலியாகக் கேட்டுக்கொண்டே, அடிகள் கலகலவென்று சிரித்துவிட்டார்.

“அந்த முதலையின் வாயினின்றும் சோலையப்பனைக் காப்பாற்ற வேறு வழியிருப்பதாகத் தோன்றவில்லை!”

“அதெப்படி உனக்குத் தோன்றும் மாரிமுத்து? வாழ்வது எந்தக் காலமோ, அந்தக் காலத்தின் சூழ்நிலைக்குத்தானே உன்னைப்போன்றவர்கள் அடிமையாகிவிட வேண்டியிருக்கிறது! சைவத்தைப் பரப்ப வேண்டுமா — அதற்காக, ஏற்காதவர்களின் மீதும், இசையாத நாட்டின்மீதும், போர்! வைணவம் வளர வேண்டுமா — போர்! சமணமா, பௌத்தமா—அவைகள் பரவவும் போர்! நாட்டைப் பிடிக்கப் போர்! பெண் கேட்டுத் தரவில்லையா— அதற்காக ஒரு போர்! அவமானமாகப் பேசினுலுமே — படைபலத்தைக் காட்டி அவனைப் பாதம் பணியச் செய்யவேண்டும்! இப்படி எதற்கெடுத்தாலும் போர்! போர்! என்று வாள் எடுக்கும் காலமல்லவா இது? ஆகவே நண்பனை மீட்கவும், போர்தொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உனக்கு உண்டானதில் ஆச்சரியமொன்றுமில்லை!”

இவ்வாறு அடிகள் சொல்லியதைக் கேட்டதும் மாரிமுத்துவிற்கு என்ன பதில் கூறுவதென்று புரியவில்லை. ஆகவே, வேறு மார்க்கம் ஏதாகிலும் இருக்கிறதா என்று யோசித்தவாறு, மௌனமாகவே இருந்தான்.

கதிரவன் மறைந்துவிட்டதினுல், வழியிலிருந்த ஒர் சத்திரத்தில் அன்றிரவு அவர்கள் தங்கினுர்கள்.

அதே இரவு சிறையில் அடைபட்டிருக்கும் சோலையப்பனைப் பார்ப்பதற்காக, செந்தாமரை வந்தாள்.

சிறைக்கதவைத் திறந்துவிட்ட காவற்காரனை வெளியே போய் இருக்கும்படிக் கூறிவிட்டு, அவள் மட்டும் தனியாகச் சோலையப்பனிருந்த அறையினுள் நுழைந்தாள்.

ஒரு பெரிய அகல் விளக்கின் எதிரே, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவனுய், கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு சோலையப்பன் உட்கார்ந்திருந்தான். அந்த அகல் விளக்கைச் சுற்றிலும் சிறிது தூரம் மட்டுமே வெளிச்சமிருந்தது. மற்றபடி அந்த அறை முழுவதும் காரிருள் கப்பிக்கொண்டிருந்தது.

செந்தாமரை அவன் அருகே செல்ல தயங்கியவளாய், இருட்டிலேயே சிறிது நேரம் நின்றிருந்தாள். எதைக் குறித்தோ அவன் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்

முகப்பில்:

எறும்பனையர் எம்மறவர்!
இன்னனையர் நம்மன்னே!
கரும்பனையர் தீந்தமிழாள்
கவிவேழ வேந்தன்எனில்
வரும்பகைவர் எதிர்ப்பெல்லாம்
என்னகும்! என்பதனை
திருமிகுந்த சிவகெங்கைச்
சீமையிலே காணீரே!

கிறான் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். இல்லாவிட்டால், சிறைக் கதவு திறக்கப்பட்ட சப்தமும், அறையினுள் அவள் நடந்து வந்த ஓசையும், அவனுக்குக் கேட்டிருக்கும் அல்லவா?

கையிலிருந்த ரோஜா மலரை நுகர்ந்து பார்த்தபடி அவனது முகத்தை ஆசையோடு பார்த்தாள்.

"என்னால்தானே இவருக்கு இந்தத் தொல்லைகள் எல்லாம் வந்தன!'

அந்த மலர்மேனியாளின் மான் விழிகள் கலங்கின.

"நான் எவ்வளவு சுதந்திரமாகக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தேன்—கன்றுக் குட்டியைப்போல! அந்தக் கன்றுக்குட்டி வளர்ந்து, நுகத்தடியில் அதன் கழுத்தைக் கட்டிய பிறகு, அதன் ஆட்டமெல்லாம் அடங்கிவிடுகிறதல்லவா? அதைப் போலத்தானே, காதலென்ற நுகத்தடியில் கட்டுண்ட பிறகு என் பழைய இன்பமெலாம் மறைந்துவிட்டது? அதற்குக் காரணம் யார்—நான்தானே?"

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மெதுவாக, 'அத்தான்!' என்றாள்.

அவன் திரும்பிப் பார்க்கவில்லை. எரியும் திரியினின்றும் வட்டமிட்டுச் செல்லும் புகையைப் பார்த்தபடி, அவன் உட்கார்ந்திருந்தான்.

"அத்தான்."

சிறிது உரத்தக் குரலில் திரும்பவும் அழைத்தாள். அதற்கும் அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

அருகே சென்று, அவனது தோள்களைத் தொட்டு, "அத்தான்!" என்றாள். தேம்பும் குரலில்.

சோலையப்பன் முகத்தை உயர்த்திப் பார்த்தான். கண்ணீர் வழிந்தோட செந்தாமரை நின்றிருந்தாள்.

"நீயா?"

"ஆமாம், அத்தான்."

"அத்தானாமே அத்தான்! உடல் விற்று உல்லாச வாழ்வு வாழ்பவளுக்கு உறவுவேறு இருக்கிறதோ?' என்று வெறுப்போடு கூறிக் கொண்டே அவன் எழுந்திருந்தான்.

ரோஜா மலரைக் கீழே போட்டு விட்டு, இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு அவள் தேம்பினாள்.

"அட அட! நான் சிறையில் வாடுவதைக் கண்டு, வாய் விட்டு அழுகிறாயா? ஊர் கெடுத்தவளே, உனக்கா அழுகை வருகிறது? திடீரென்று வந்திருக்கிறாயே, நல்ல நடிப்போடு. என்னிடமிருந்து அறிய இன்னும் ஏதாகிலும் இரகசியம் மீதமிருக்கிறதா?"

"அத்தான்!"

"இன்னுமா என்னை ஏமாளி என்று எண்ணிக்கொண்டு, ஏய்க்க வந்திருக்கிறாய்? என்ன தைரியம் உனக்கு? போ வெளியே!" என்று ஆத்திரத்தோடு, அவளது கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

அவன் தள்ளிய வேகத்தில், கால் இடறித் தொப்பென்று அவள் கீழே விழுந்துவிட்டாள்.

(வளரும்.)

சிறுகதைப் போட்டி

சிறந்த மூன்று கதைகளுக்கு

ரூ. 500 அன்பளிப்பு

கதை அனுப்ப கடைசி தேதி 31-10-66

தமிழ் நாட்டில் இளம் எழுத்தாளர் துறை முன்னேற, புத்தம் புதிய எழுத்தாளர்களைப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்த 'சிறுகதைப் போட்டியொன்று' தொடக்கப்பெறும். தேர்ந்து எடுக்கப்பட்ட கதைகள் தனிப் புத்தக வடிவில் வெளிவரும். ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களே! எங்கே உங்கள் கதைகள்! கதை எழுதும் விவரங்கள் அறிய 5 காசு அஞ்சல் வில்லைகள் ஐந்துடன் விண்ணப்பிக்கவும்.

கலைச்செல்வி பதிப்பகம்,

திருவாரூர் அஞ்சல்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஏதும் பேசவில்லை!! பேசினுல், 'நீயா நானு' என்ற பிரச்சினைக்குத்தான் போய்த் தீரவேண்டும் என்பதை இருவரும் புரிந்துகொண்டு, இப்போதைக்கு 'கப் சிப்' என்று இருந்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டார்கள் போலும்.

நல்ல அரசு! நல்ல உறவு! நல்ல நிலைமை!!

காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டபோது வாய் திறவாமலிருந்த பிரதம மந்திரியார், நாணய மதிப்புக் குறைப்பை எதிர்க் கட்சியினர் கண்டிக்கும்போது எவ்வளவு ஆத்திரத்தைக் கொட்டுகிருர்!

பாராளுமன்ற நடவடிக்கையைப் பார்த்தால் நன்ருகப் புரிகிறதே!

இந்திரா காந்தி அம்மையார் மட்டுமல்ல, நாணய மதிப்பைக் குறைத்தது தவறு, அறிவீனம், அக்ரமம், அடிமைப் புத்தி என்றெல்லாம் கருதிக் கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள்கூட, பாராளுமன்றத்தில், எதிர்க் கட்சியினர் தாக்கும்போது தீட்டிக்கொண்டு கிளம்பவேண்டி ஏற்பட்டு விடுகிறது—எதிர்க் கட்சிகளைத் திருப்பித் தாக்கிட! அதற்குக் காரணம் கட்சிக் கட்டுப்பாடாம்!

ஒரு கட்சியிலே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையில், கட்சித் தலைவருக்கும் கட்சியின் நடுநாயகங்களுக்கும் இடையிலே இவ்வளவு கருத்து வேற்றுமை எழலாமா? எழுந்தான பிறகு, தததமது தன்மானத்தை இழந்துவிடத்தக்க முறையிலே, நடந்துகொண்டிடலாமா?

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது நியாயம் என்று கட்சியன் பெரும்பான்மையினர் முடிவு செய்தால், ரூபாயின் மதிப்பைக் குறைத்தது அடாத செயல், அமெரிக்காவுக்கு அடிபணியும் இழிசெயல் என்ற கருத்தைக் கொண்டுள்ள, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மொராாஜிதேசாய், கிருஷ்ணமேனன், ராம் சுபாக் சிங், தேபர் போன்ருர் எப்படி அந்தக் கட்சியிலே தொடர்ந்து இருந்திடலாம்? எந்த வகையிலே அது நேர்மையாகும்?

பிரிட்டிஷ் முதலமைச்சர் வில்சன் மேற்கொண்டுள்ள போக்குச் சரி என்று தமக்குப் படாததாலே **கசின்ஸ்** எனும் தொழிற் கட்சிப் பிரமுகர், 'ராஜிநாமா'ச் செய்தார் என்று சின்னுட்களுக்கு முன்பு தானே படித்தோம். அது ஜனநாயக மரபு! ஏன் காங்கிரஸ் கட்சி அத்தகைய மரபினை மேற்கொள்ளவில்லை?

நடைபெறும் வேடிக்கை எதைக் காட்டுகிறது என்ருல், காங்கிரஸ் கட்சியிலே உயர்மட்டத்தில் உள்ள எவருக்கும், இடத்தை இழந்துவிட மனம் இல்லை என்பதைத்தான். முக்கியமான பிரச்சினையில் கருத்து வேறுபாடுகொண்ட நிலையிலேயே ஒரு கூட்டு வாழ்க்கை நடத்த முனைகின்றனர்.

உடம்பாடு இலாதார் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று

என்ருர் வள்ளுவப் பெருந்தகை.

தாக்கிளும், திணறிப்போனுர்!—என்றும், கண்டித்தோம், கலங்கிப்போனுர்! என்றும், கேள்விகளை எழுப்பினும், பதில் கூறவே துணிவு இல்லை! என்றுமல்லவா, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எண்ணிக் கொள்வார், இந்திராகாந்தி அம்மையாரைப்பற்றி — காரியக்கமிட்டிக் கூட்டத்திற்குப் பிறகு.

அந்த இழிநிலைமையைத் தாங்கிக்கொண்டுதானே கட்சி ஒற்றுமையைக் காத்துக்கொள்ள முடியும்? அழகாகுமா!!

கமிட்டிக் கூட்டங்களிலே செம்மையாகக் கண்டன அடி கொடுத்துவிட்டு காங்கிரஸ் தலைவர்கள், பாராளுமன்றத்திலே அதே பிரச்சினையைப்பற்றி எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவிக்கும்போது, அதே நிதிமந்திரியையும், திட்ட மந்திரியையும் எதிர்க் கட்சியினருக்குப் பதில் கூறும்படி அனுப்புகிருர்கள்! விந்தை!!

காரியக்கமிட்டிக் கூட்டத்திலே, தங்கள் சொந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களே தாக்கினர்! திருப்பித் தாக்கக்கூட வக்கற்றுப்போன நிலை! ஆனுல் அதே அமைச்சர்களை, எதிர்க்கட்சியினரின் கண்டனங்களுக்குப் பதிலளித்துக் கட்சியை, ஆட்சியைக் காப்பாற்றும்படி, தாக்கியவர்களே அனுப்பிவைக்கிருர்கள் என்பதைக் கேலிப்படமாக்கி, டில்லி **'இந்துஸ்தான் டைம்ஸ்'** எனும் ஆங்கில நாளிதழ், வெளியிட்டிருக்கிறது.

இந்திராகாந்தி அம்மையாரை அந்தப் படத்தில் காட்டவில்லை. அடிபட்டுக்கிடப்பதாக நிதி அமைச்சரையும், திட்ட அமைச்சரையும் மட்டும் காட்டியிருக்கிருர்கள்; நேருவின் திருக்குமாரியாரைக் கேவலப் படுத்தக்கூடாது என்ற 'கண்ணியம்' அதற்குக் காரணம் என்று கருதுகிரேும்.

ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பு தவறு என்ருல், அந்தத் தவறு செய்த பொறுப்பு, நிதி அமைச்சர், திட்ட அமைச்சர் ஆகிய இருவருடையது மட்டுமல்ல; அமைச்சர் அவையின் முடிவு அது என்பதாலே, பொறுப்பை ஏற்கவேண்டியது அமைச்சர் அவை முழுவதுமாகும்.

படத்தைப் பார்க்கும்போது தாக்குதலுக்கு அந்த இரு அமைச்சர்கள் மட்டுமே ஆளாகி இருப்பதாகத் தோன்றுகிறது என்ருலும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் மற்றவர்களும் வீசிய கண்டனம், இந்திரா காந்தி அம்மையாருக்கும் சேர்த்துத்தான்.

அத்தனைப் பலமான கண்டனத்துக்கு ஒரு சொல் பதில் பேசவில்லை, அம்மையார்!

இது குறித்து ஒரு வார்த்தை பேசவில்லை — காமராஜர்!

அம்மையார், ஆட்சித் தலைவர்! காமராஜர் கட்சித் தலைவர்! அந்த இருவரும், பேசவில்லை!! ஏன?

*

இது என்ன போக்கோ!

டில்லிப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும், அமளி மூண்டுவிட்டதே என்று பண்பாளர்கள் வருத்தப் படத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன.

ஜனநாயகப் பண்பும், பாராளு மன்றத்தில் கட்டிக் காப்பாற்றுப்பட்டு வந்த மரபும் பாழடிக்கப்பட்டு வருவதனை எவரும் விரும்பமாட்டார்கள்; ஆதரிக்க மாட்டார்கள்.

ஆனால் சென்ற கிழமை நிகழ்ச்சிகள் மிக்க அருவருப்பான முறையிலே உருவமெடுத்துவிட்டன.

கூச்சல் குழப்பம், தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட மறுப்பது, வெளியேற்ற உத்திரவு, அதனையும் ஏற்க மறுப்பு, காவலர் அழைக்கப்படுவது; அவர்களுடன் அமளி, கட்டிப் பிடித்துத் தூக்கிச் செல்லுவது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன. களங்கம் ஏற்பட்டுவிட்டது, ஜனநாயகக் கண்ணியத்துக்கு.

இதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும் போதுதான், விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை நடத்திய எதிர்க் கட்சிகளின் மீது இயல்பாக எவருக்கும் ஏற்படக் கூடிய கசப்பும் கொதிப்பும் மறைந்து, ஆளுங் கட்சியின் போக்கு ஏன் இப்படி விந்தை நிரம்பியதாக இருக்கிறது என்ற வேதனை உணர்ச்சி எழுகிறது.

அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர், எதிர்க்கட்சியினர்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கான காரணம் பலவற்றிலே முக்கியமான ஒன்று, இந்த ஆட்சி, பொருளாதாரச் சீர்குலைவு, ஏற்படுத்திவிட்டுள்ளது என்பதாகும்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே, பொருளாதார நிலைமை பற்றிய விவாதத்தை நடத்திவிட சர்க்கார் தரப்பினர் முனைந்தனர்.

இது முறையல்ல; முதலில் நம்பிக்கையில்லாத் தீர்மானமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது எதிர்க் கட்சிகளின் வாதம்.

இதனை வலியுறுத்தியதில் எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு நின்றன. ஆளுங்கட்சி, வேண்டுமென்றே இதனை ஏற்க மறுத்தது; அமளி மூண்டது.

நடைபெற்ற நிகழ்ச்சிகளை எவரும் கண்டிக்கத் தயங்க மாட்டார்கள் என்ற போதிலும், இந்த நிலைமையைச் சர்க்காரின் காரணமற்ற பிடிவாதப் போக்குதான் மூட்டிவிட்டது என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள்.

பாராளுமன்ற மரபு கெடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு.

எரிச்சல் காரணமாகவோ, ஏமாற்றம் காரணமாகவோ கூட எதிர்க்கட்சிகள், அந்த மரபினைக் கெடுத்திட முனைதல் கூடாது; எவரும் ஒப்புக் கொள்வர்.

ஆனால் பொறுப்பில் உள்ள ஆளுங்கட்சி, வேண்டுமென்றே எரிச்சலை மூட்டத் தேவையில்லை அல்லவா? மரபு காத்திடும் பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டுமல்லவா?

அந்த முறையிலே ஆளுங்கட்சி நடந்துகொள்ளவில்லை; நடந்து கொண்டிருந்திருப்பின் அமளி மூண்டிராது.

பொறுப்புடன், சிறிதளவு, தாராளத் தன்மையையும் இணைத்து, எதிர்க்கட்சிகளின் பேச்சுக்கு ஓரளவு மதிப்பளிக்கும் பண்பினை ஆளுங்கட்சி பெற்றிட வேண்டும்: அந்தப் பண்பினை மேற்கொள்ள மறுத்ததன் மூலம், எரிச்சலை மூட்டிவிட்டது விளைவு? விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்.

விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எழுமே என்பதை எண்ணி, ஆளுங்கட்சி தனக்கென வகுத்துக்கொண்டுள்ள முறையை மாற்றிட இயலுமா என்று வாதாடுவரேல், மாற்றிட முடியும் என்பதை எடுத்துக் காட்டும் விதமாக இப்போது இந்திராகாந்தி அம்மையார் நடந்து கொண்டிருக்கிறார்கள்

நிதி அமைச்சர் துவக்கிய பொருளாதார நிலை பற்றிய விவாதத்தை ஒத்தி வைத்திருப்பதாகவும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலிலே விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

எப்போது? அமளிமூண்டு, அருவருப்பு வளர்ந்து, மரபு கெடுக்கப்பட்டான பிறகு!!

அறிவுத் தெளிவு, உரியநேரத்தில் கிடைத்திட வேண்டும்; பலன் மிகுதியாக இருக்கும்; பாராட்டப் படத்தக்கதாகவும் இருந்திடும்.

காலங்கடந்து காட்டப்பட்டிருக்கிறது, அறிவுத் தெளிவு; அமளிக்குப்பிறகு.

இப்போது பிரதம மந்திரியார் மேற்கொண்டுள்ள போக்கினை, எதிர்க்கட்சிகள் முறையிட்டபோதே மேற்கொண்டிருந்திருந்தால், அமளி எழக் காரணமே கிடைத்திராது, ஆளுங்கட்சி பாராட்டப்பட்டிருக்கும்.

அமளிபல நடைபெற்றான பிறகு, எதிலே ஆளுங்கட்சி பிடிவாதம் காட்டிவந்ததோ, அதிலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

துவக்கப்பட்ட விவாதத்தை நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது; தோல்வியை ஒப்புக் கொண்டதுபோன்றதாகும் இந்தப் போக்கு.

இது வருந்தத்தக்கது; இதனினும் வருந்தத்தக்கது இந்தச் சம்பவம் ஏற்படுத்திவிடக்கூடிய ஒரு (விரும்பத்தகாத) எண்ணம்.

அமளி நடத்தித்தான் உரிமையைப் பெறமுடியும், நியாயத்தைக் காணமுடியும் என்ற ஒரு எண்ணத்தை எதிர்க்கட்சிகள் பெற்றிடச் செய்வதாக அமைந்திருக்கிறது, துவக்கத்திலே காட்டப்பட்ட பிடிவாதமும், இப்போது காட்டப்படும் பணிவும்.

வேண்டுகோள் பலிக்காது; இந்த ஆட்சியினர் முறையீட்டுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள்; அமளி மூண்டால்மட்டுமே பணிந்துகொடுப்பார்கள் என்ற எண்ணத்தை எதிர்க்கட்சிகள் பெறத்தக்கதாக இந்தச் சம்பவம் அமைந்துவிட்டது. இப்படி ஒரு எண்ணம் வளருவது நல்லதல்ல. நாடாள்வோர் தமது போக்கினாலேயே ஜனநாயக மரபினைக் கெடுக்கிறார்கள் என்ற கருத்து வலுவடைந்துகொண்டு வருவதை உணர்ந்து இனியாகிலும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் பேச்சுக்கு உரிய மதிப்பளித்து, ஜனநாயகப் பண்பினை மேம்பாடடையச் செய்திட வேண்டுகிறோம்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.